**நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம்- மேலதிக நிதியளித்தல் - 2022**

---

நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம் - மேலதிக நிதியளித்தலின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2021 செப்தெம்பர் 04 ஆந் திகதிய 9255 - எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் பட்டோலை 2இ பிரிவு ஐ (பீ) மற்றும் செயற்திட்ட கைநூலின் 07 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் பொருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் குழாயிடப்பட்ட தண்ணீர் சேவைகளிற்கும் முன்னேற்றப்பட்ட சுகாதாரத்திற்ம் அணுகுவழிகளை அதிகரித்தலும் ஒன்றிணைந்த நிறுவனங்களின் இயலளவை வலுப்படுத்துவதும் செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,823 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 42.74 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 12,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40 மில்லியன் மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் (ஐடீசுனு) நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது.

செயற்திட்டமானது மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கையின் கீழான அதன் நடவடிக்கைகளை 2021 செப்தெம்பர் 04 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது கைதவிர்க்கப்பட்ட கடன்களின் மீது வட்டியாக ஏற்பட்ட ஐ.அ.டொலர் 24,588.59 இற்கு சமமான ரூபா 8.81 மில்லியன் கூட்டுத் தொகை மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறான செயற் திட்டத்தின் நிதிக் கூற்றுக்களில் பதியப்பட்டிருக்கவில்லை. ஆகவே, அதே தொகையால் நடைபெறும் வேலை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 8.81 | இந்த கொள்கை 2018 ஆம் ஆண்டிலிருந்து திறைசேரியால் நிறுத்தப் பட்டிருந்ததுடன் இது திறைசேரியால் அரசாங்க செலவினமாக அடையாளம் காணப்பட்டுள்ளமையால் எங்களுடைய திறைசேரி வாக்குப்பண பேரேட்டில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 230.∵.2013 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம், செயற்திட்ட காலப் பகுதியின் போது ஏற்பட்ட கடன்படல் கிரயங்கள் மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், கைதவிர்க்கப்பட்ட கடன்களின் மீது கடப்பாட்டு கட்டணமாக ஏற்பட்ட ஐ.அ.டொலர் 74,435.05 இற்கு சமமான ரூபா 22.3 மில்லியன் கூட்டுத் தொகை மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் பதியப்பட்டிருக்கவில்லை. ஆகவே, அதே தொகையால் நடைபெறும் வேலை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 22.3 | முன்னைய குறைபாட்டினைப் போல செயற்திட்ட செலவினமாக கருதப்ப்டிருக்காமையால் இது எங்களுடைய வாக்குப்பண பேரேட்டில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 230.∵.2013 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம், செயற்திட்ட காலப் பகுதியின் போது ஏற்பட்ட கடன்படல் கிரயங்கள் மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| (இ) | ரூபா 16.31 மில்லியன் நாணய மாற்று வித்தியாசம் முன் இறுதி கட்டணம் தொடர்பில் கணக்கேடுகளில் சீராக்கப் பட்டிருக்கவில்லை. ஆகவே, கடன் மீதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 16.31 | நாங்கள் மாதாந்த சராசரி வீதங்களின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கி பெற்றிருந்த நாணய மாற்று வீதம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்கள கணக்குகளின் பிரகாரம் கணக்குகளிற்குள் எடுத்திருந்தோம். ஆனால், டுமுயுளு 21 இன் பிரகாரம், உலக வங்கி கடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதியப்பட்டது, சராசரி நாணய மாற்று வீதம் தொகை சீராக்கல் துஏ இல 5 மூலம் செய்யப்பட்டது. | மீளாய்வாண்டு இறுதியில் நாணயமாற்று வித்தியாசம் சரியாக சீராக்கல் செய்யப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயல் நடவடிக்கை திட்டதின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது அமுலாக்குவதற்கு 14 நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், 06 நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்பட்ட 50 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையான பௌதீக முன்னேற்றத்தில் 10 சதவீதம் முதல் 51 சதவீதம் வரையான அடைதல்கள் மாத்திரம் வெளிப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டு இறுதில் மிகுதி எட்டு நடவடிக்கைகளில், ஒரு நடவடிக்கையிலிருந்து 40 சதவீத முன்னேற்றத்தையும் 7 நடவடிக்கைகளில் 25 சதவீத முன்னேற்றத்தையும் அடைவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் பூச்சிய முன்னேற்றத்தையே காட்டியிருந்தது. முகாமைத்துவமானது அந்த தாமதங்களிற்கான காரணங்களாக வெளிச் சூழலின் தாக்கம் மற்றும் கொள்வனவின் தாமதம் என்பன இருந்ததென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட காலப்பகுதியன் 27 மாதங்களில் 15 மாதங்கள் சென்றிருந்தது. ஆகவே, முகாமைத்துவமானது மேற்குறித்த இனங்கண்ட விடயங்களை திருத்துவதற்கும் இந்த செயற்திட்டத்துடன் நெருக்கமான மேற்பார்வையை வைத்திருப்பதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்காது விடுமாயின் பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்ட பூர்த்தியாக்கலானது ஆபத்தான நிலையில் இருந்ததென அவதானிக்கப்பட்டது.

### 3.2 மனிதவள முகாமைத்துவம் தொடர்புபட்ட விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தின் சகல உத்தியோகத்தர்களிற்காகான நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்காக சம்பளங்கள் தற்போதைய நிதியளிப்பு உடன்படிக்கையிலிருந்து செலவழிக்கப்பட்ட போதிலும் 2022 ஒக்தோபர் மாதத்திற்கான சம்பளங்களிற்காக மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கையிலிருந்து ரூபா 13.9 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மேலதிக நிதி பயன்பாட்டிற்கான மனித வள தேவைப்பாட்டை திட்டமிடப்பட்டு மேலதிக நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்திற்கு ஈடுபடுத்திய உத்தியோகத்தர் கிரயங்களை இனங்காண்டும் இருக்கவில்லை. | சம்பளமானது செயற்திட்ட முகாமைத்தவ கிரயமாக உள்ளதுடன் இது இரண்டு நிதிகளிலும் ‘‘செயற்திட்ட முகாமைத்துவ ஆதரவு’’ கூறு 4 இன் கீழ் தவறியிருநதது, நாங்கள் இரண்டு நிதிகளிற்காகவும் செயற்திட்ட உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியமையால் 1 மாத சம்பளம் செலுத்துவதற்கு மேலதிக நிதியளிப்பை பயன்படுத்தியிருந்தோம். | மேலதிக நிதியளிப்பின் கீழ் செயற்திட்டத்திற்காக ஆளணி தேவைகளை தாபிக்க வேண்டும். |